# புறநானூறு

1. புறநானூறு குறிப்பு வரைக.
   - புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
   - 'புறம் என்றும், புறப்பாட்டு என்றும் அழைக்கப் பெறுவது புறநானூறு.
   - இதனை புறம் + நான்கு + நூறு எனப் பிரிக்கலாம்..
   - இந்நூலுக்கு கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இந்நூலைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் அறியப்படவில்லை.
   - இந்நூலின்கண் 11 புறத்திணைகளும், 65 துறைகளும் கையாளப்பட்டுள்ளன.
2. எட்டுத்தொகை நூல்கள் யாவை?
   - நற்றிணை
   - குறுந்தொகை
   - ஐங்குறுநூறு
   - பதிற்றுப்பத்து
   - பரிபாடல்
   - கலித்தொகை
   - அகநானூறு
   - புறநானூறு
3. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! - குறிப்பு வரைக

மறுமை இன்பத்தைப் பெறவிரும்பினாலும், உலகம் முழுவதையும் வெல்ல வேண்டுமென்று நினைத்தாலும், நிலைபெற்ற புகழை விரும்பினாலும், அதற்குச் செய்ய வேண்டுவன யாவை எனில், நீர் இன்றி வாழாதது உடல், அவ்வுடலுக்கு உணவு கொடுத்தவரே உயிர்கொடுத்தவரும் ஆவார். உணவால் அமைவதுதான் மனித உடல் என்று குடபுலவியனார் கூறுகிறார்.